# கிளாலியில் புக்காரா, தாக்குதல் ஒருவர்பலி!

(எழுதுமட்டுவாள்)
சிறிலங்கா விமானப் படைக்கு சொந்தமான புக்காரா விமானமும், ஹெலிகொப்டரும் கிளாலிப் பகுதியில் நேற்றிரவு 9-30 மணி தொடக்கம் சூட்டு வீச்சு தாக்குதலை நடத்தின. மருதனுமடத்தைச் சேர்ந்த மாணிக்கம் செல்வநாயகம் (வயது 41) பலியானார். கிளாலி கரையைச் சுற்றி
(4-ம் பக்கம் பார்க்க

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 15 இதழ் 17
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 27-2-1994

## 1987 ஆண்டு கொலை குறித்து விசாரணைக்கு கோரிக்கை

(கொழும்பு)
களுத்துறை நாடாளுமன்ற உறுப்பினர் நெவில் பெர்னாண்டோவின் வீட்டில் 1987ம் ஆண்டு மார்கழி மாதம் இடம்பெற்ற எட்டுப்பேரின் கொலைகள் பற்றி மீளவும் விசாரிக்க வேண்டுமென்று பாணந்துறை நகரசபை கேட்டுள்ளது.
தனது பிள்ளை உட்பட எட்டுப் பேரின் கொலைகள் பற்றி
4ம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. மனிதஉரிமைக்குழு இலங்கை மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)
ஐக்கியநாடுகள் சபை மனித உரிமைகள் கமிட்டி ஒரு வருடத்தில் இலங்கையில் பலர் காணாமற் போயுள்ளனரென்று குற்றம் சாட்டியுள்ளது என மேலமாகாண முதலமைச்சர் சந்திரிகா விஜயகுமாரணதுங்க விக்குறாசலில் நடந்த
(4ம் பக்கம் பார்க்க)

# ★ மட்டு - வவுணதீவு
# பொலிஸ் - ராணுவ முகாம்கள்
# தீப்பிடித்து எரிந்து நாசம்!

## பல துப்பாக்கிகள் முற்றாகச்சேதம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு சிறிலங்கா பொலிஸ் இராணுவ முகாம்கள் தீப்பிடித்து எரிந்ததினால் அங்கிருந்த பல துப்பாக்கிகளும் பெருந்தொகையான துப்பாக்கி ரவைகளும் நாசமாகின.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த முகாம்கள் திடீரெனத் தீப்பிடித்தன. அதன்போது உள்ளேயிருந்த பல 56 ரக தானியங்கித் துப்பாக்கிகளும், அவற்றிற்குரிய 1800 துப்பாக்கி ரவைகளும் முற்றாக நாசமாகியதாக தெரிவிக்கப்படுகிறது.
இத் தீவிபத்து ஏன் ஏற்பட்டது என்பது பற்றி இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. முகாம்களில் தீ பரவியதும் உடனே சிறீலங்கா விமானப் படையின் தீயணைப்புப் பிரிவினர் அப்பகுதிக்கு விரைந்தனர். ஆயினும் முகாம்களில் பரவிய தீயினை அணைப்பதற்
(4-ம் பக்கம் பார்க்க)

## கச்சதீவை மீண்டும் இந்தியா பெறவேண்டும்
### தமிழக மீனவர் வலியுறுத்து

(சென்னை)
கச்சதீவை இந்தியா மீண்டும் பெறவேண்டும். இல்லாவிட்டால் இப்பகுதியைநீண்டகால குத்தகைக்கு இந்தியா இலங்கையிடமிருந்து பெற வேண்டும். இவ்வாறு நேற்று சென்னையில் நடைபெற்ற கச்சதீவு பற்றிய கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.
இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட பல மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்,
தமிழக மீனவர்கள் எதிர்காலத்தில் சந்திக்கக்கூடிய பிரச்சினைகள் பற்றி முன்கூட்டியே உணர்ந்துகொள்வதற்கு முன் கச்சதீவை இந்திய மத்
(4 ம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் மீது கடற்படை மீண்டும் தாக்கு

(சென்னை)
கச்சதீவுக்கருகே நேற்று முன்தினம் மாலை மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை நோக்கி இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் மீனவர் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.
(4ம் பக்கம் பார்க்க)

## பூநகரி முகாம்தகர்ப்பு விசாரணைக்குழு அறிக்கை பகிரங்கப்படுத்தக்கூடாது

(கொழும்பு)
பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பு பற்றிய இராணுவ விசாரணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துவது விடுதலைப்புலிகளுக்கே சாதகமாக அமைந்துவிடும்" இவ்வாறு நாடாளுமன்ற விவகார, சுற்றுலா, பாதுகாப்பு அமைச்சின் கனிஷ்ட அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.
அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,—
பூநகரி இராணுவ முகாம்
(4-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள கைதிகள் விடுதலைக்கு அனைவரும் உதவவேண்டும்

(கொழும்பு)
வடக்கில் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிங்களப் படையினர் எல்லோரையும் விடுதலை செய்வதற்கு பௌத்த பிக்குகள், கத்தோலிக்க குருமார்கள், உயரதிகாரிகள், ஜனாதிபதி ஆகியோர் முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகளால் அண்மையில் விடுவிக்கப்பட்ட பொலிஸ்காரர் திலகரத்ன பண்டா பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.
அவர்மேலும் கூறியதாவது: நாங்கள் தடுத்து வைக்கப்பட்
(4-ம்பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலைக்கழகம் நேற்று மூடப்பட்டது!

(பேராதனை)
பேராதனைப் பல்கலைக்கழகம் உடனடியாக மூடப்படுவதாக பேராதனைப் பல்கலைக்கழக உப வேந்தர் நேற்று அறிவித்துள்ளார்.
சகல பீடங்களின் விரிவுரைகளும் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழக வதிவிடப் பிரச்சினை தொடர்பாக மாணவர்கள் துணைவேந்தரின் இல்லத்தை நேற்று ஆறுநாளாக ஆக்கிரமித்திருந்த வேளையில் இவ்வறிப்பு வெளியானது.
பல்கலைக்கழக வளவிலிருந்து நேற்று மாலை 6 மணிக்கு முன்னர் மாணவர்கள் அனைவரும் வெளியேறவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளார்கள்.
(4ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஊழியர்களின் லீவுகள் அனைத்தும் ரத்து

(கொழும்பு)
கிழக்கு மாகாணத் தேர்தலுக்காக முன்கூட்டியே நியமிக்கப்பட்ட தேர்தல் அதிகாரிகள் ஊழியர்கள் அனைவரினதும் லீவுகள் நேற்றுமுதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா அறிவித்துள்ளார்.
மேற்படி தேர்தல் நியமிக்கும்
(4-ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர் சிபார்சு

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தரை தெரிவு செய்வதற்காக மூவரது பெயரை யாழ். பல்கலைக்கழகப் பேரவை நேற்று முற்பகல் தெரிவு செய்தது.
பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இத்தெரிவில் பௌதீகத் துறைத் தலைவர் பேராசிரியர் க. குணரத்தினம், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே. பாலசுந்தரமணியம், கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர
(4ம் பக்கம் பார்க்க)

## சிங்கள பேரின வாதிகளால் புவியியல் அமைப்பேமாற்றம்!

(யாழ்ப்பாணம்)
கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மை இனத்தவரின் எண்ணிக்கையை குறைத்தும் சிங்களவரின் தொகையை அதிகரித்துக் காட்டுவதன் மூலமும் அங்கு புவியியல் அமைப்பையே நிர்வாக ரீதியாக சிங்கள பேரினவாதிகள் உருமாற்றியுள்ளதாக சிறிலங்கா சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.
கொழும்பு பத்திரிகை ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்
(4-ம் பக்கம் பார்க்க)

# போரினால் வடக்கு-தெற்கு தொடர்புகள் சீர்குலைவு!

## கொழும்பில் ஆயர் கென்னத்

(கொழும்பு)

யுத்தத்துக்கு மிக விரைவில் ஒரு முடிவு ஏற்பட்டு சமாதானம் உதயமாக வேண்டும் என்று யாழ்ப்பாண மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்ணாண்டோ கொழும்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: தன்னோடு வந்த தூதுக்குழுவினர் யாழ்ப்பாண மக்களின் விருப்பத்தை மிகத் தெளிவாக அறிந்துள்ளனர். இயல்பான வாழ்க்கைக்காகவும் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும் யாழ் மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கையால் யாழ்ப்பாணத்தில் பெரும் உயிர்ச்சேதங்களும், பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன. வடக்குக்கும் தெற்குக்குமான தொடர்புகள் பெரிதும் சீர்குலைந்துள்ளன. அங்கு அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருட்களின் விலைகளும் பெருமளவு அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் கூறினார். —வி-ம-சி

# ஊழியர் சேமலாப நிதியை

## செலுத்தாதோர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக்கு சேர்க்கப்படாமல் இருக்கும் கோடிக்கணக்கான ரூபாவை வசூலிப்பதற்கு தொழில் திணைக்களம் தீவிரமாக செயற்பட்டுவருகின்றது.

ஊழியர் சேமலாப நிதிக்கு பணத்தை செலுத்த வேண்டியவர்கள் எதிர்வரும் மே மாதம் 31ம் திகதிக்கு முன்னர் அதனைச் செலுத்த வேண்டும்.

மேற்படி திகதியில் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தத் தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தொழில் அமைச்சர் எம். எச். எம். அபுசாலி தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான உத்தரவுகள் தொழில் ஆணையாளருக்கும் அமைச்சரால் விடுக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை செலுத்தத்தவறும் தொழில் அதிபர்களைத் தொழில் திணைக்களம் திடீர் சோதனைகள் மூலம் இப்போது கண்டுபிடித்துவருகிறது. —இ-சி-வி

# போதைப்பொருள் தடுப்பு முயற்சியில் பொலிஸ் தீவிரம்

(கொழும்பு)

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை பொலிசார் தீவிரமாக்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் தடுப்புநடவடிக்கைகள் வெற்றியளித்ததைத் தொடர்ந்து இவ்வருடம் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் அதிகமானோர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் போதைப் பொருள் பாவித்துவரும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 'ஹெரோயின்' இங்கு முக்கியமான போதைப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலான ஹெரோயின் இலங்கைக்கு பாகிஸ்தானிலிருந்தே வருகிறது.

சென்ற ஆண்டு 42 கிலோகிராம் ஹெரோயின் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

போதைப்பொருள் சம்பந்தமான குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 4,402 பேர் கடந்த வருடம் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் பாவனையை ஒழித்துக்கட்டுவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமென பொலிசார் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-ரி)

## 1993/94 கல்வி ஆண்டு

### பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி சில வாரங்களில் வெளிவரும்

(கொழும்பு)

1993/94-ம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக பிரவேச வெட்டுப்புள்ளி பற்றிய விபரங்கள் இன்னும் சில வாரங்களில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1992-ம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த முதல் தொகுதி மாணவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் புள்ளிவிபர ஆய்வு கணிதம் கலை பாடங்களை பயிலும் மாணவர்களாவர்.

அடுத்த கல்வி ஆண்டுக்காக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும்போதும் பல்கலைக்கழக பிரவேசத்தில் இருந்துவரும் காலதாமதம் நீக்கப்படும் என பல்கலைக்கழக விவகார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். —இ-சி

### யாழ். பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பெயர்கள் தெரிவு செய்யப்பட்டன.

இப்பெயர்கள் அடுத்த ஒரு சில தினங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிசீலனைக்காக கொழும்பிற்கு அனுப்பப்படவுள்ளது. இம் மூவரில் ஒருவரது பெயரை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சிபார்சு செய்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும். அவரை ஜனாதிபதி யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக நியமிப்பார்.

ஏப்ரல் முற்பகுதியில் யாழ். பல்கலைக்கழக புதிய துணைவேந்தர் பதவியேற்கவுள்ளதால் மார்ச் பிற்பகுதிக்குள் புதிய துணைவேந்தரின் பெயர் வெளியிடப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது —இ-சி

### பேராதனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதுள்ள நிலைமையை பரிசீலனை செய்த பின்னர் நேற்று நடைபெற்ற செனட் சபைக் கூட்டத்தில் பல்கலைக்கழகத்தை மூடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டதாக உபவேந்தர் பேராசிரியர் ஜே. எம். குணதாச தெரிவித்தார்.

பட்டதாரி மாணவர்கள் பேராதனைப் பல்கலைக்கழக வளவிற்குள் பிரவேசிப்பதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் செனட் சபை அறிவித்துள்ளது. நடைபெறவிருந்த பரீட்சைகள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளன. -கே-ரி

### ஹெலி நோட்டம்

(அரியாலை)

யாழ் குடாநாட்டிலுள்ள கரையோரப் பகுதிகளான அரியாலை, பாஷையூர், மணியம் தோட்டம் ஆகிய இடங்களுக்கு மேலாக வான்பரப்பில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று நோட்டமிட்டுச் சென்றது. (59)

### பூநகரி முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கையை பாதுகாப்பின் நிமித்தம் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தக்கூடாது. பகிரங்கப்படுத்தினால் அது விடுதலைப் புலிகளுக்கே சாதகமாக அமைந்துவிடும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். —வி-சி

### சிங்கள பேரின

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுமை ஒன்றிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் இவ்வாறு பேரினவாதசக்திகளால் உருமாற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலை குச்சவெளி பிரதேசசபைப் பிரிவிலுள்ள பல ஊர்களின் தமிழ்ப் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் பிரதேசசபைகள் அமைக்கப்பட்டபோதும் அவற்றின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டபோதும் தனியே பெரும்பான்மை இனத்தவரின் நலன்கள் மட்டுமே கவனத்தில் எடுக்கப்பட்டதாகவும் இது சிறுபான்மை இனத்தவரின் நலன்களை திட்டமிட்டு புறக்கணிப்பதாகவே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மட்டு வவுணதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏச்சுமார் இரண்டரை மணி நேரத்திற்கு மேல் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. -வி

### தேர்தல் ஊழியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஊழியர்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட இருக்கும் விசேட உத்தியோகஸ்தர்கள் உட்பட அனைவரும் தேர்தல் முடிவடைந்து ஒருவாரம்வரை எக்காரணம் கொண்டும் லீவு எடுக்க முடியாது. அவ்வாறு லீவு எடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார். (வி-ரி)

### ஐ. நா மனித

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் அரசாங்கத்தின் மேல் குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் கூறியதாவது:

எம்பிலிப்பிட்டி, சூரியகந்த போன்ற இடங்களில் ஒரு கவலையின் பேரில் நாங்கள் சென்று புதைகுழிகளை தோண்டிப் பல எலும்புக்கூடுகளை எடுத்தோம். இந்நாட்டு இளைஞர்கள்மேல் ஆதரவுபோல் கூறிக்கொள்ளும் அரசாங்கம் இவ்வாறு செய்வது முறையா? நீதி, கருணை, சமாதானம் என்று கூறிக்கொள்ளும் அரசாங்கம் பலர் காணாமற்போனதற்கு உடந்தையாகவுள்ளது என்றார் —ம-ரி

### சிங்கள கைதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்த காலத்தில் விடுதலைப் புலிகளால் நன்கு பராமரிக்கப்பட்டோம். அப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆயர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்ணாண்டோ அவர்கள் எம்மை சந்திக்க வந்தபோது எங்களை விடுதலை செய்வதற்கு முயற்சி எடுக்குமாறு வேண்டினோம். அவர் கொழும்பு சென்று அங்கிருந்து தனது பிரதிநிதியூடாக கடிதமூலம் எங்களை விடுவிக்குமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களிடம் கேட்டிருந்தார். அதன்படி எம்மில் இருவரை நிபந்தனை எதுவுமின்றி தலைவர் பிரபாகரன் விடுதலை செய்தார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டால் ஏனைய எமது சகாக்கள் விடுதலைபெறலாம். இதற்காக பத்திரிகைகள், பௌத்த பிக்குகள் ஆகியோர் முன்வர வேண்டும் என்றார். ம-ரி

### 1987 ஆண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல புதிய தகவல்களை தாம் தரத் தயார் என்று பானந்துறை நகரசபை உறுப்பினர் பீட்டர் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த எட்டுப் பேருக்கும் ஜே.வி.பிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கிளாலியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டமிட்ட ஹெலிகொப்டரிலிருந்து 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. புக்காரா விமானத்திலிருந்து தொடர்ந்து குண்டுகள் வீசப்பட்டன.

நேற்று நள்ளிரவு வரை நடைபெற்ற இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றி எதுவும் தெரியவரவில்லை.

இதேவேளை நேற்றிரவு 8 மணியிலிருந்து ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளாலிக் கரையை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தாக்குதல்களின் மத்தியிலும் கிளாலி - பூநகரி படகுச் சேவை வழமைபோல் நேற்றிரவும் இடம்பெற்றது. (155-170-வி

### கச்சதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய அரசு அவசரப்பட்டு இலங்கையிடம் ஒப்படைத்து விட்டது.

ஏற்கனவே செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய முடியாவிட்டாலும், குடியிருப்புக்கள் ஏதும் இல்லாத கச்சதீவை நீண்டகால குத்தகைக்கு இலங்கை அரசிடமிருந்து பெறவேண்டும். இவ்வாறு செய்யப்பட்டால்தான் வருங்காலத்தில் தமிழக மீனவர்கள் கச்சதீவுக் கடல் பகுதியில் பாதுகாப்பாக தமது தொழிலை செய்ய முடியும் என்றும் கூறப்பட்டது. —வி-ரி

### இந்திய மீனவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தற்போது இராமநாதபுரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதென்று இராமேஸ்வரத்தில் உள்ள காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில வாரங்களாக இக்கடற் பகுதியில் வைத்து இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்திவருவது தெரிந்ததே.

கடந்த 12-ந் திகதி அதிகாலை இக்கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் உயிரிழந்தனர்.

## மரண அறிவித்தல்

### Dr. பொன்னம்பலம் மயில்வாகனம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக்கொண்ட மலாயன் பென்சனியர் பொன்னம்பலம் மயில்வாகனம் நேற்று 26-2-94 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் திருமதி நா. மகேஸ்வரி, சோ. மனோரஞ்சிதம், திரு. தர்மராஜா, Dr கனகராசா (கனடா), திருமதி சு. மனோன்மணி, Dr. ஞானபவான் (U K), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மு. நாகேந்திரம், பொ. சோமசுந்தரம் B Sc., திருமதி மங்கையற்கரசி, தேவதிராணி B.A.(கனடா), திரு. கு. சிவசுப்பிரமணியம், Dr. ஞா. வசந்தி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சண்டிலிப்பாய் இல்லத்தில் இன்று (27-2-94) நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 1 00 மணிக்கு தகனக் கிரியைக்காக சண்டிலிப்பாய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சோமசுந்தரம்.
(மருமகன்)

சண்டிலிப்பாய் வடக்கு.

(இ-836)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B